செய்தி வெளியீடு எண்: 006 நாள் : 05.01.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 3.12.2015 அன்று தமிழத்தில் வெள்ள சேதங்களை நேரில் பார்வையிட வந்தபொழுது, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள சேதங்களை விவரித்து, வெள்ள பாதிப்பு குறித்த கூடுதல் அறிக்கை ஒன்றினை அனுப்பி வைப்பதாக தெரிவித்ததுடன், வெள்ள நிவாரண மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூ.5000 கோடி ஒதுக்கீடு செய்யுமாறும் கோரினார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உடனடியாக ரூ.1000 கோடி தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள். அதனை தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.12.2015 அன்று பாரத பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டில் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பினை தெரிவித்து கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தார்கள்.

இக்கடிதத்துடன், டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை பட்டியலிட்ட அறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்தார்கள். வெள்ள நிவாரண மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக மொத்தம் 25,912.45 கோடி ரூபாய் விடுவிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கடிதம் மற்றும் வெள்ள பாதிப்பு அறிக்கைகளை பெற்ற மத்திய அரசு, உள்துறை இணைச் செயலர் திரு. டி.வி.எஸ்.என் பிரசாத் தலைமையில் 8 உறுப்பினர்கள் கொண்ட மத்திய குழுவினை வெள்ள சேதங்களை மதிப்பிடுவதற்காக அனுப்பி வைத்துள்ளது. இந்தக் குழுவில் மத்திய வேளாண்மைத் துறை கூடுதல் ஆணையர் திரு.ஓய்.ஆர். மீனா, மத்திய குடிநீர் துறை முதுநிலை ஆலோசகர் திரு.ஜி.ஆர். ஜார்கர், மத்திய சுகாதாரத் துறை முதுநிலை மண்டல இயக்குநர் டாக்டர் ஆர். ரோஷினி, மத்திய எரிசக்தித் துறை உதவி இயக்குநர் திரு. சுமித் கோயல், மத்திய ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. பி.சி. பெஹரா (Thiru B.C. Behera), மத்திய நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளர் திரு.என்.எம். கிருஷ்ணன்உன்னி, மத்திய சாலை போக்குவரத்துத் துறை மண்டல இயக்குநர் திரு.டி.எஸ். அரவிந்த் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். இக்குழுவானது 5.1.2016 முதல் 6.1.2016 வரை தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ள சேதங்களை மதிப்பிடும் பணியில் ஈடுபடும்.

திரு. டி.வி.எஸ்.என் பிரசாத், இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலான மத்திய குழுவினர் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (5.1.2016) தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். அப்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மத்திய குழுவிடம் பின்வருமாறு தெரிவித்தார்கள்.

Shri TVSN Prasad, Team Leader and members of the Inter-Ministerial Central Team.

- This team had last visited the State at the end of November, 2015, and made an on the spot assessment of damages caused due to heavy rainfall in November in various Districts.

- The first week of December also saw unprecedented heavy rains. The Chennai Metropolitan area was deluged. The Districts of Kancheepuram Tiruvallur, Cuddalore, Thoothukudi and Tirunelveli were also affected badly.
- Massive rescue and relief operations were immediately launched by the State Government on a war footing on my instructions.
- The rains and floods caused extensive devastation and damage to property and infrastructure. When the Hon'ble Prime Minister visited Chennai on 3rd December, 2015, I had mentioned to him that the State Government was preparing a Supplementary Memorandum to cover the losses caused during the floods in the first week of December, 2015.
- On 22.12.2015, we submitted a supplementary Memorandum.
- Our additional requirement of funds for temporary and permanent restoration due to damages caused by the floods in the first week of December is 17,431.51 crore rupees. Including the requirement of 8,481 crore rupees indicated in the first Memorandum, the State will need a total amount of 25,912.45 crore rupees for relief and restoration efforts.
- The floods in Tamil Nadu have already been declared as a "Calamity of Severe Nature".
- I thank the Hon'ble Prime Minister for deputing the same Central team to the State again.
- The requirement of funds for relief and restoration of infrastructure are well beyond the resources available with the State. I therefore request the Central team to make an in-depth assessment of the damages suffered by the State and to submit its report to the Ministry of Home Affairs expeditiously.

மத்திய உள்துறை இணைச் செயலாளர் திரு.டி.வி.எஸ்.என் பிரசாத், இ.ஆ.ப., அவர்கள் தமிழக அரசு உடனடியாக மேற்கொண்ட வெள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்து பாரட்டுத்தெரிவித்து கீழ்கண்டவாறு தெரிவித்தார்:

"There was widespread appreciation in the Ministries of Government of India about the prompt manner in which the State Government machinery rose to the occasion and attended to rescue, relief and restoration work. The State Government was successful in preventing outbreak of any epidemic by timely measures such as chlorination and health camps"

பெருமழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிப்பதை தமிழக அரசு முழுவீச்சில் தொடங்கியுள்ளது என்பதை கருத்தில் கொண்டு மத்திய குழு தனது பரிந்துரைகளை விரைவில் அளித்து மத்திய அரசு தேவையான நிதி உதவியை உடனடியாக அளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு நத்தம் ஆர். விசுவநாதன், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு பி. பழனியப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கே. சண்முகம், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு. என் எஸ் பழனியப்பன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளத் துறை மற்றும் வேளாண்மைத் துறை (பொறுப்பு) செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலாளர் திரு.ஆர். வெங்கடேசன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு:– இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.**
**நாள்:– 5.1.2016.**